**ஊழியர் சேம நிதியம் - 2022**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் சேம நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்றுமற்றும் விரிவான வருமானக் கூற்று, மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஊழியர் சேம நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பரிசோதிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும் என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்,

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக் கூற்றுக்களுக்கான பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யும் பட்டோலையின் பிரகாரம், முழுமையாக தேய்விடப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிச் சபை மற்றும் தொழில் திணைக்களத்திற்கு அமைய முறையே ரூபா. 159.18 மில்லியன் மற்றும் ரூபா. 526.83மில்லியன் ஆகும். அந்த சொத்துக்களிடையே தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் சொத்துக்கள் இனங்காணப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியம பிரகாரம் மீளாய்வு செய்யப்படாததால் ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் | தொழிலாளர் திணைக்களத்திற்குரிய பெறுமானத் தேய்வு பூர்த்தி ஆகியுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடடிவக்கை எடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பயன்படுத்த முடியாத நிலையான சொத்துக்களை அகற்ற குறித்த பண்டகக் கணிப்பீட்டு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பிரகாரம் திருத்துவதற்கும், பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத சொத்துக்களை உரிய முறையில் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி சமர்பிக்கப்பட்ட 07 வங்கிக் கணக்குகளிற்குரிய வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் பின்வருமாறு 2001 முதல் 2021 திசெம்பர் 31 வரை காலப் பகுதிக்குரிய தீர்க்கப்படாத கூட்டுத் தொகை ரூபா 11,515.19 மில்லியனான மீதி மற்றும் 2022 ஆண்டிற்குரிய ரூபா 672.64 மில்லியனான மீதியை சரிசெய்ய அல்லது தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்காது 2023 மார்ச் 31 திகதியளவிலும் தொடர்ந்தும் வங்கி இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (i) | 2021 ஆண்டிற்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட போதும் மறுக்கப்பட்ட காசோலைகள், வங்கிக் கூற்றில் மற்றும் காசுப் புத்தகத்தில் குறிப்பிடப்படாத கொடுக்கல் வாங்கல்கள், நேரடி வரவு மற்றும் செலவு மீதிகளின் மொத்த பெறுமதியான ரூபா மில்லியன் 10,918.89 இனை இதுவரை தீர்த்திருக்காததுடன், மீளாய்வாண்டிற்குரிய காசுப் புத்தகத்தில் குறிப்பிடப்படாத கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நேரடி வரவு மற்றும் செலவு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா மில்லியன் 597.54 ஆனது. | 2022 ஆண்டிற்குரிய இனங்காணாத கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் காசுப் புத்தகத்தில் சரியாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஒரு சில கொடுக்கல் வாங்கல்களின் தன்மையை பொருத்து தீர்க்க தகவல்கள் கிடைப்பது எதிர்வரும் காலப்பகுதியில் ஆகையால் அக் கொடுக்கல் வாங்கல்களை தீர்க்க முடியுமாவது இயற்கையாகவே சில தாமதங்களுடனாகும். ஊ.சே.நி. திணைக்களத்தால் மற்றைய தரப்பினரின் உதவியுடன் வங்கி இணக்கக் கூற்றுக்களில் காணப்படும் தீர்க்கப்படாத கொடுக்கல் வாங்கல்களை தீர்க்கும் நடடிவக்கை தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை விரைவில் இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | வைப்பில் இடப்பட்ட ஆனால் தேறாத காசுக் கட்டளை, தேறாத காசோலை மற்றும் வழங்கப்பட்ட போதும் | 2022 ஆண்டிற்குரிய இனங்காணாத கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் காசுப் புத்தகத்தில் சரியாக | சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை விரைவில் இனங்கண்டு தீர்க்க |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்த பெறுமதி ரூபா 523.39 மில்லியன் ஆனது. அவற்றுள் ஓராண்டை விஞ்சிய காலமாக நிலவும் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 454.98 மில்லியன் ஆனது. | அறிக்கையிடப்பட்டுள்ளது. ஒரு சில கொடுக்கல் வாங்கல்களின் தன்மையை பொருத்து தீர்க்க தகவல்கள் கிடைப்பது எதிர்வரும் காலப்பகுதியில் ஆகையால் அக் கொடுக்கல் வாங்கல்களை தீர்க்க முடியுமாவது இயற்கையாகவே சில தாமதங்களுடனாகும். ஊ.சே.நி. திணைக்களத்தால் மற்றைய தரப்பினரின் உதவியுடன் வங்கி இணக்கக் கூற்றுக்களில் காணப்படும் தீர்க்கப்படாத கொடுக்கல் வாங்கல்களை தீர்க்கும் நடடிவக்கை தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | பயன்படுத்தப்படும் கணனி கணக்கீட்டு தொகுதியின் குறைபாட்டினால் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்பட்ட வரவு மீதி ரூபா 141.32 மில்லியன் ஆனதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக காசுப் புத்தகத்தில் இடம் பெற்ற தவறான மீதி ரூபா 6.67 மில்லியனும் காணப்பட்டது. | 2022 ஆண்டிற்குரிய இனங்காணாத கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் காசுப் புத்தகத்தில் சரியாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஒரு சில கொடுக்கல் வாங்கல்களின் தன்மையை பொருத்து தீர்க்க தகவல்கள் கிடைப்பது எதிர்வரும் காலப்பகுதியில் ஆகையால் அக் கொடுக்கல் வாங்கல்களை தீர்க்க முடியுமாவது இயற்கையாகவே சில தாமதங்களுடனாகும். ஊ.சே.நி. திணைக்களத்தால் மற்றைய தரப்பினரின் உதவியுடன் வங்கி இணக்கக் கூற்றுக்களில் காணப்படும் தீர்க்கப்படாத கொடுக்கல் வாங்கல்களை தீர்க்கும் நடடிவக்கை தற்போதும் மேற்கொண்டு வருவதாக. | கணனி கணக்கீட்டு தொகுதியின் தவறுகளை விரைவில் இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் மோட்டார் வாகனங்கள் வருடாந்தம் நேர் கோட்டு முறையின் கீழ் 20 சதவீதம் வீதத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டும். 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கு அமைய (தொழில் திணைக்களத்திற்கு உரியதான) மோட்டார் வாகன கிரயம்ரூபா 97.20 | நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்தல், சொத்துப் பராதீனம், நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயட் காலத்தை கணிப்பீடு செய்தல், மேலும் தொடர்ந்தும் பயன்படுத்த முடியுமான சொத்துக்களை இனங்காணல் தொடர்பாக முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலவிவரும் பிரச்சினை | கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனானதுடன்,பெறுமானத் தேய்வு கணக்கிடும் ஏட்டிற்கு அமைய முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் கிரயம்ரூபா 36.22 மில்லியன் ஆகும். அதற்கமைய கிரயம்ரூபா 60.98 மில்லியனான மோட்டார் வாகனங்களிற்கு பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட வேண்டிய போதிலும், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | காணப்படுவதுடன் அப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறேன். | |
| (இ) | மீளாய்வாண்டில் மாவட்ட தொழிலாளர் அலுவலகத்தை மேம்படுத்த மேற்கொண்ட ரூபா 97.18 மில்லியனானதுமெஹெவர பியசவில் உள்ளக வடிவமைப்பு கட்டமைப்பினை தயாரிக்கும் பூர்த்தியாகாத வேலைக் கணக்கினுள் காட்டப்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ஒதுக்கிய ஏற்பாட்டுப் பகுதியொன்று பிரதேச அலுவலகங்களில் ஊ.சே.நி. கருமபீடம் அமைக்க மற்றும் பொது மக்களிற்கு சேவை வழங்கும் தேவைப்பாட்டிற்காக மேற்கொள்ளப்படும் நிர்மாணங்களிற்காக செலவிடப்பட்டுள்ளது. | மூலதன செலவுகள் நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்பிக்கப்பட வேண்டியமை. |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| **விடயம்** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூபா மில்லியன்)** | **தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி (ரூபா மில்லியன்)** | **வேறுபாடு (ரூபா மில்லியன்)** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 1,130.30 | 713.38 | 416.92 | எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் நிலையான சொத்துமீள்மதிப்பீட்டின் மூலம் சரியான பெறுமானங்களை இனங்காண நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளங்கும் தரவுகள் மற்றும் நேரொத்த அறிக்கைகளில் உள்ளடங்கும் தரவுகளை இணக்கஞ செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1999 பெப்ரவரி 11ஆம் திகதிய 01/99 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கை | எல்பிடிய மாவட்ட தொழில் அலுவலகத்தில் 2022 ஆண்டிற்குரியதாக அலுவலக பரீட்சிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு மிகை அறவீடு மற்றும் பங்களிப்பு தொகையை அறவிடும் முதலாம் கட்டளையை வெளியிட்டு இறுதிக் கட்டளையை அனுப்ப 20 நாட்கள் முதல் 321 நாட்கள் வரையான காலம் கடந்திருந்த 88 சந்தர்ப்பங்கள், மஹரகம மாவட்ட தொழில் அலுவலகத்திகு உரியதாக 26 நாட்கள் முதல் 225 நாட்கள் வரையான காலம் கடந்திருந்த 45சந்தர்ப்பங்கள், மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. மேலும், முதலாம் கட்டளை வெளியிட்டிருந்த போதும் இறுதி கட்டளை வெளியிட்டிருக்காத 74 சந்தர்ப்பங்கள் எல்பிடிய மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு உரியதாகவும் 62 சந்தர்பங்கள் ஹரகம மாவட்ட தொழில் அலுவலகத்திகு உரியதாகவும் நிலவின.<br><br>எல்பிடிய மற்றும் மஹரகம மாவட்ட அலுவலக்களிற்குரியதாக நிலுவை பங்களிப்புத் தொகை மற்றும் மிகை அறவீட்டை அறவிட கட்டளை அனுப்பப்பட்டிருந்த போதும் முறையே 92 சந்தர்ப்பங்களில் மற்றும் 89 இலும் ரூபா 33 மில்லியன் மற்றும் ரூபா 142 மில்லியன் அறவிட வேண்டியதாக இருந்தது. | கடந்த காலத்தினுள் நிலவிய போக்குவரத்து, எரிபொருள் நெருக்கடி காரணமாக சேவை முறை மாற்ற முறையில் கடமைக்கு அறிக்கையிடல், அரசினால் மின்சார துண்டிப்பு மேற்கொண்டமை மற்றும் சாதாரண கடமையினுள் ஏற்படும் ஏனைய கடினம் ஆகிய காரணத்தின் மீது அறிவித்தல் வெளியிடும் தாமதம் ஏற்பட்டது. | தாமதமின்றி அறிவித்தல்களை அனுப்புவதன் ஊடாக அங்கத்தவர்களுக்கு உச்ச சேவையை வழங்க நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 17 திகதிய PED சுற்றறிக்கை இலக்கம் 8/2019 இன் 2.1 பந்தி | அரச இலத்திரனியல் பெறுகைகள் தொகுதியுடன் பதிவு செய்திருக்கவில்லை. | பதிவிற்கான உரிய விண்ணப்பம் அரச இலத்திரனியல் பெறுகைகள் செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 இன் 01/2020 இலக்க பொது நிதி சுற்றறிக்கை ஊடாக வெளியிடப்பட்ட நி.பி. 877 (2) (இ) | நிதியம் தொடர்பாக அத்தாட்சிப்படுத்திய நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சுற்றறிக்கை பிரகாரம் சமர்பித்திருக்கவில்லை. | பதில் சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | பொது நிதி சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிவிளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் விளைவுகள்ரூபா 314,052 மில்லியனான இலாபமாவதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 340,728 மில்லியன் ஆகும். அதன் பிராகாரம் செயற்பாட்டுப் விளைவுகளில்ரூபா 26,676 மில்லியனான பினனடைவொன்றை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. நிதியத்தின் வட்டி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 55,591 மில்லியனால் அதிகரித்த போதும் நிதி உபகரணங்களின் நியாயமான பெறுமதி சரிசெய்தல் அடிப்படையில் இனங்காணப்பட்ட நட்டம் ரூபா 40,878 மில்லயனானமை இந்த பின்னடைவுக்கு காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமான விடயங்களின் போக்கு பகுப்பாய்வு**

| | **விபரம்** | **2022 ஆம் ஆண்டு (ரூபா மில்லியன்)** | **2021 ஆம் ஆண்டு (ரூபா மில்லியன்)** | **வருமானம் அதிகரித்தல் / (குறைவடைதல்) (ரூபா மில்லியன்)** | **சதவீதம்** |
|---|---|---|---|---|---|
| **(அ)** | **வட்டி வருமானம்** | | | | |
| i. | திறைசேரி பிணைமுறிகள் | 325,423 | 285,052 | 40,371 | 14 |
| ii. | திறைசேரி உண்டியல்கள் | 15,272 | 256 | 15,016 | 5866 |
| iii. | நிலையான வைப்புக்கள் | 4,225 | 3,857 | 368 | 10 |
| iv. | மீள் கொள்வனவு உடன்படிக்கை | 1,421 | 544 | 877 | 161 |
| v. | கடன் பத்திரம் - பட்டியலிடப்பட்ட | 2,291 | 3,153 | (862) | -27 |
| vi. | கடன் பத்திரம் - பட்டியலிடப்படாத | 637 | 816 | (179) | -22 |
| **(ஆ)** | **பங்கிலாப வருமானம் - சாதாரண பங்குகள்** | | | | |
| i. | பட்டியலிடப்பட்ட | 3,570 | 4,057 | (487) | -12 |
| ii. | பட்டியலிடப்படாத | 3,957 | 2,628 | 1,329 | 51 |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் திறைசேரி பிணைமுறிகள், நிலையான வைப்புக்கள் மற்றும்மீள் கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடுகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட வட்டி வருமானம் முறையே 14 சதவீதத்தினாலும் மற்றும் 10 சதவீதத்தினாலும் மற்றும் 161 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. மேலும், திறைசேரி உண்டியல்கள் முதலீடுகளில் இருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் 5866 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. அவ்வாறாயினும், கடன்

பத்திரங்கள் பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத முதலீட்டிலிருந்து பெற்ற வட்டி வருமானம் முறையே 27 சதவீதத்தால் மற்றும் 22 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், நிதியத்தின் மொத்த வட்டி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 18.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

மேலும், நிதியத்தின் பங்கிலாப வருமானத்தை கவனத்தில் கொள்ளும்போது, கடந்த வருடத்துடன் ஒப்பீட்டளவில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கிடைத்த பங்கிலாப வருமானம் 12 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் பட்டியலிடப்படாத கம்பனிகளின் கிடைத்த பங்கிலாப வருமானம் 51 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்கான நிதியத்தின் முக்கியமான சில விகிதங்கள் பின்வருமாறு.

| | **விகிதம்** | **2022** | **2021** |
|---|---|---|---|
| (i) | தேறிய இலாப விகிதம் (%) | 83.52 | 87.35 |
| (ii) | சராசரி முதலீட்டின் மீதான பெறுபேறு விகிதம் (%) | 9.12 | 10.78 |
| (iii) | அங்கத்துவ மீதிக்கமைவான நலன்கள் விகிதம் (%) | 8.21 | 8.21 |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பட்டியலிடப்பட்ட 11 கம்பெனிகளில் மேற்கொண்டிருந்த ரூபா 9,087.68 மில்லியன் சாதாரண பங்கு முதலீடுகளுக்காக 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை. | 2019 அண்டில் ஏற்பட்ட உயிர்த ஞாயிர் தாக்குதல், 2020 – 2021 ஆண்டுகளில் கொவிட் - 19 தொற்று நிலைமை மற்றும் 2022 ஆண்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி மற்றும் காணப்பட்ட அரசியல் நிலையற்ற தன்மை போன்ற காரணங்களால் குறித்த கம்பளிகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் கவனிக்கத்தக்க அளவால் பின்னடைந்தது. | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | பட்டியலிடப்பட்ட 08 கம்பனிகளில்மேற்கொண்டிருந்த ரூபா 7,329.84 மில்லியனான சாதாரண பங்கு முதலீடுகளுக்கு 2021 மற்றும் 2022 ஆண்டுகளிற்குரிய பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை. | 06 கம்பனிகள் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் நட்டம் அறிக்கையிட்டிருந்தமை மற்றும் 2021 ஆண்டினுள் மேலும் பரவிய தொற்று நிலைமையுடன் ஒட்டிய மட்டுப்படுத்தல் மற்றும் 2022 ஆண்டின் போது நிலவிய பெறும்பாக பொருளாதார மற்றும் அரசியல் நிலையற்ற தன்மை போன்ற காரணங்களால் கம்பளிகளின் வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகள் பின்னடைந்தமையும், பங்கிலாபத்தை வெளியிடாமைக்கு காரணமாக இருக்கலாம். | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2010 ஆம் ஆண்டில் விமான நிறுவனம் ஒன்றில் மேற்கொண்டரூபா 500 | இது முழுமையான வாறு அரச உரிமையின் கீழ் நிலவும் கம்பனியொன்றாவதுடன், | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் முதலீட்டுக்காக இது வரை எவ்வித வருமானமும் நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | தொடர்ந்தும் நட்டமடைந்ததால் அரசினால் திறைசேரி ஊடாக வழங்கிய நிதி ஏற்பாட்டின் மீது நடாத்திச் செல்லப்படும் கம்பனியொன்றாகும். | உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் “த பினான்ஸ் கம்பெனி” யின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட காரணத்தால் நிதியத்திற்கு ரூபா 205.49 மில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது. | 2020 மே 22 திகதி இலங்கை மத்திய வங்கியினால் இந்த கம்பனிக்கு வழங்கியிருந்த வாடகை கொள்வனவு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட பின்னர், 2020 திசெம்பர் 28 திகதி கொழும்பு பங்குச் சந்தையூடாக இந்த கம்பனியின் பங்கு பரிமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதனால், கம்பனியை கலைக்கும் போது, நிதியத்திற்கு அதன் முதலீடு அல்லது ஒருபகுதி, எஞ்சிய பெருமதியாக கிடைக்க முடியும். | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பட்டியலிடப்படாத கம்பனிகளில் பங்கு முதலீடுகளில் ரூபா 5000 மில்லியன் அதாவது 53சதவீதம் 2013 ஆம் ஆண்டில் ஹோட்டல் கட்டிடத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஹோட்டல் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு உரிய கிராண்ட் ஹைட் கொழும்பு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஜூலை மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதும் அதற்கு தேவையான பெறுகைகள் செயல்முறைகளை மேற்கொள்வதற்கும் நிதித் தேவைப்பாடுகளை சேகரிப்பதற்கும் பணிப்பாளர் சபைக்கு தேவையான அதிகாரங்களை வழங்குதல் 2022 சனவரி 04 திகதிய இலக்கம் 21/2278/306/100 கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் இடம்பெற்றிருந்தது. அதற்கமைய திட்டமிடப்பட்டவகையில் 2021 திசெம்பர் 27 ஆம் திகதி அளவில் ஹோட்டல் கட்டிடத் தொகுதி நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் | குறித்த அமைச்சரவை பத்திரத்தின் மூலம் நிர்மாணத்தை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானித்திருந்த போதும், அதற்கு தேவையான நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்ளும் மற்றும் அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ளும் பிரச்சினை நிலவியதாக அறிவிக்கப்பட்டதுடன், அதன் காரணமாக வெளிநாட்டு முதலீட்டை பெற்றுக் கொள்ள 2021 ஆண்டு ஒக்டோபர் மாதம் கென்வீல் ஹோட்டல் கம்பனியினால் முதலீட்டு முன்மொழிவு கோரப்பட்டது. நாட்டில் நிலவிய அந்நிய செலாவணி பிரச்சினை மற்றும் பொருளாதார நிலைமைகளின் கீழ் அதனை செயற்படுத்த முடியாது என கம்பனியினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் பாதுகாப்பற்ற நிலை குறைந்த வகையில் உகந்த முதலீடுகளை மேற்கொள்ளுதல். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு அளவிலும் இந்த நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகி இருக்கவில்லை. அதனால் மேலே கூறப்பட்ட முதலீடு மேற்கொள்ளப்பட்டு 9 வருட காலம் கடந்திருந்த போதிலும் இந்த முதலீட்டினால் எதுவித பிரதிபலனும் இதுவரை நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | | |
| (ஊ) | 2016 ஆண்டிற்கு முன்னர் கிடைத்த முற்செலுத்தல்களில் உள்ளடங்கும் ரூபா 4.8 மில்லியனான இனங்காணாத முற்பணம் தொடர்பாக உறுதி செய்யும் ஆவணங்கள் சமர்பிக்கப்படாததுடன் அம் முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது எஞ்சியுள்ள இந்த மீதியை தீர்க்க போதிய தகவல்கள் திணைக்களத்திடம் இல்லை. அது தொடர்பாக நிதிச்சபையின் ஆலோசனையை கணக்காய்வு குழுவிற்கு (AAC) மற்றும் நிதிச் சபையின் அது பற்றி அறிவித்து, அவற்றின் அவதானிப்புகளையும் கவனத்திற் கொண்டு 2023 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறித்த சீராக்கத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | மீதியை இனங்காண மற்றும் தீர்ப்பதற்குரிய செயற்பாடுகளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | மஹரகம மாவட்ட தொழில் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட1,428 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்ட திகதி முதல் பங்களிப்புத் தொகை செலுத்தி இருக்காத போதும் அந் நிறுவனங்கள் மூடிவிடப்பட்ட அல்லது செயற்பாடு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட நிறுவனமா என இனங்கண்டிருக்கவில்லை. 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்திருந்த 81 நிறுவனங்கள்பதிவு செய்த திகதி முதல் பங்களிப்புத் தொகையை செலுத்தி இருக்கவில்லை. | 46 நிறுவனங்களிலிருந்து நிலுவை பங்களிப்பு தொகையை அறவிட தற்போது முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்த 81 நிறுவனங்களில் 21 நிறுவனங்களின் பங்களிப்பு தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை பங்களிப்பு மற்றும் மிகை அறவீட்டு தொகையை அறவிடும் ஒழுங்கான வேலைத் திட்டமொன்றை தயாரித்து அங்கத்தவர்களுக்கு உச்ச சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | நிதிய அங்கத்தவர்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்க மற்றும் மீண்டும் பதிவு செய்யும் நடவடிக்கைகளுக்கு ஆரம்பித்த கருத்திட்டத்திற்காக ரூபா 12.61 மில்லியன் செலவிட்டு 15,000 அட்டைகளும்,ரூபா 17.67 மில்லியன் செலவிட்டு 35 கணக்கு மீதி பரீட்சிக்கும் இயந்திரங்களும்(KIOSK) | அங்கத்தவர்களின் மீதியை பரீட்சிக்க 15,000 KIOSK ID Card அச்சிட்ட போதும் ஒரு அட்டைக்காக ரூபா 600 ஆன தொகை செலவாவதால் E-wis நிறுவனத்துடன் கலந்துரையாடி மேலதிக கட்டணமின்றி விரல் அடையாளத்தை பயன்படுத்தி KIOSK இயந்திரத்தினூடாக மீதியை பரீட்சிக்க முடியுமானவாறு கணனி நிகழ்சித் திட்டம் திருத்தப்பட்டது. | சிறந்த திட்டமொன்று மற்றும் ஆய்வொன்றுடன் கூடியவாறு கருத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டியமை மற்றும் அங்கத்துவ நிதியத்திலிருந்து செலவு செய்யும் போது ஆக்கபூர்வமாக செலவு செய்ய நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்த இந்த 15,000 அட்டைகள் உரிய செயற்பாடுகளிற்கு பயன்படுத்தப்படாது கணக்காய்வு திகதி அளவிலும் விளைவற்று தகவல் தொழிநுட்ப பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் 35 இயந்திரங்களில் 2 இயந்திரங்கள் பராதீனம் செய்யப்பட்டிருந்தன. செயலற்ற நிலையில் காணப்படும் எஞ்சிய 33 இயந்திரங்களில் 25 இனை பராதீனத்திற்காக பிரதான அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. தற்போது செயற்படாத இந்த கருத்திட்டத்திற்காக சரியான தேவைப்பாட்டை இனங்கண்டு சொத்துக்களை கொள்வனவு செய்யவும், வினைத்திறனாக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுத்திருக்காத காரணத்தால் நிதியத்தின் நிதி விளைவற்றதாக செலவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | KIOSK 35 இயந்திரங்களை நாடு முழுவதும் பொருத்தி 05 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்த பின்னர் அவற்றின் பயனுள்ள ஆயட்காலத்தை மீளாய்வு செய்து பெறுமானத் தேய்வை செம்மையாக்கியதுடன் தற்போது 14 இயந்திரங்களை பிரதான அலுவலகத்திற்கு கொண்டுவந்து தொடர்ந்தும் பயன்படுத்த முடியுமான 08 Finger Print Scanner இயந்திரங்களை அவற்றின் தேவைப்பாட்டின் பிரகாரம் 08மாவட்ட தொழில் அலுவலகங்களிற்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எடுக்க வேண்டும். |
| (ஐ) | புகைப்படம் மற்றும் விரல் அடையாள கருத்திட்டத்திற்காக 2017 ஆண்டில் கொள்வனவு செய்த 12 Logitech Quick Camera கள் மற்றும் 2019 ஆண்டில் ரூபா 1.7 மில்லியன் செலவில் கொள்வனவு செய்த 50 Logitech Quick Camera களில் 35 உம்,2018 ஆண்டில் ரூபா 3.3 மில்லியன் செலவில் கொள்வனவு செய்த 24 மடிக் கணனிகளில் 2 ஆனது தொடர்ந்து செயலற்று நிலவுவதாக இருப்பு புத்தக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது | கணனிகள் 24 மற்றும் Logitech Quick Camera பயன்படுத்தும் பிரிவுகளில் தொடர்ச்சியான சேவை வழங்களிற்காக நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்ட அந்த உதிரிப் பாகங்களை தேவைப்பாட்டிற்கு ஏற்ப அலுவலகங்களிற்கு வெவ் வேறாக விநியோகிக்க நடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கிறேன். | சிறந்த திட்டமொன்று மற்றும் ஆய்வொன்றுடன் கூடியவாறு கருத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டியமை மற்றும் அங்கத்துவ நிதியத்திலிருந்து செலவு செய்யும் போது ஆக்கபூர்வமாக செலவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிதியத்தின் அங்கத்துவ கணக்கு மீதியான ரூபா 3,380,616.83 மில்லியனில் ரூபா 63,571 மில்லியனை பலதரப்பட்ட | | |

காரணங்களிற்காக தனித்தனி அங்கத்துவ கணக்குகளிற்கு செலவு வைக்கப்படாது காணப்பட்டது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | அங்கத்துவ நிதியத்திலுள்ள தொழில் ஆணையாளர் கணக்கில் தொழில் வழங்குனர்களிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அறவிட்டிருந்த தொகையில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று இலங்கை மத்திய வங்கியில் நிறுத்தி வைத்துள்ள ரூபா 11,123 மில்லயனான தொகையை மற்றும் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்து அறவிட்டு தீர்க்கும் வரை தொழல் திணைக்களத்தில் பொது வைப்புக் கணக்கொன்றில் நிறுத்தி வைத்திருந்த ரூபா 334 மில்லியனான தொகையை ஒவ்வொறு அங்கத்துவ கணக்கிற்கும் செலவு வைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ‘‘சீ’’ அறிக்கையின்றி அனுப்பிய பங்களிப்பு தொகை போன்று பூரணமற்ற அல்லது வேற்றுமையுடன் கூடிய‘‘சீ’’ அறிக்கை உடன் அனுப்பிய பங்களிப்புத் தொகையும் காணப்பட்டமை. 1994 ஆண்டு முதல் சேவை நிறுவன இலக்கமின்றி அனுப்பிய பங்களிப்புத் தொகை‘‘Z’’ எனும் பெயரில் தற்காலிக தொழில் வழங்குனர் இலகத்தின் கீழ் தொழில் ஆணையாளர் கணக்கில் நிறுத்திகாணப்பட்டமை போன்ற காரணங்களால் இக் கணக்கில் காணப்படும் மீதிகளை தனி அங்கத்தவர் கணக்கிற்கு கணக்கீடு செய்ய முடியாதிருந்தது. | தீர்க்க முடியாத பங்களிப்பு தொகையை தாமதமின்றி தீர்க்கும் வினைத்திறனான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |
| (ii) | தொழில் வழங்குனரின் பெயரில் தனித்தனியாக பேணிச் செல்லப்படும் “நடைமுறை ஆண்டின் பங்களிப்பு பணம் இலக்கம் 01” எனும் பெயரிலான கணக்கின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா49,365 மில்லியன் மீதியை உரிய அங்கத்தவர்களிற்கு பகிர்ந்திருக்கவில்லை.அங்கத்தவர் கணக்குகளிற்கு செலவு வைக்காது நிலவும் கணக்கினை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு 2013, 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் அரச கணக்குகள் மீதான செயற்குழு கட்டளை ஊடாக விதிக்கப்பட்டிருந்தது. மேலும் இம் மீதியினுள் எந்த ஆண்டுகளிற்குரிய மீதிகள் காணப்படுகின்றன என உறுதி செய்து கொள்ள காலப் பகுப்பாய்வொன்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | ஊழியர் சேம நிதிய திணைக்களத்தினால்தொழில் வழங்குனர் பங்களிப்பு கணக்கில் காணப்படும் மீதியை தீர்க்க, குறித்த கணக்கில் பங்களிப்பு தொகை திரளாதிருக்க பங்களிப்பு தொகையை செலுத்த கொடுப்பனவு முறைமையை தயாரித்தல் மற்றும் பங்களிப்பு தொகை, குறித்த தனி அங்கத்துவ கணக்குகளிற்கு நாளாதுவரையாக்கலை துரிதப்படுத்த எடுக்க முடியுமான உச்ச நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக வெளியிடுகிறோம். | தீர்க்கப்படாத பங்களிப்பு தொகையை தாமதமின்றி தீர்க்கும் வனைத்திறனான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | தீர்க்க போதிய முயற்சி எடுத்திருந்த போதும் பல காரணங்களால் அங்கத்தவர்களுக்கு செலுத்தாது நிறுத்தி வைத்துக் கொண்ட நலன்கள் மற்றும் உரித்து கோரப்படாத நலன்களாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்றுரூபா 980 மில்லியனும், குறை / மிகைப் பங்களிப்பு பணமாக ரூபா.2,232மில்லியனும், குறை/மிகை நலன்களை செலுத்தலாக ரூபா. 463 மில்லியனும் அங்கத்துவ நிதியத்தின் கீழ் தொடர்ந்தும் தீர்க்க வேண்டியதாக காணப்பட்டது. | மேற்குறிப்பட்ட கணக்கின் இந்த மீதிகளை தீர்க்க தொழில் திணைக்களத்தின் தலையீடு மற்றும் உதவி தேவை எனவும் அவ்வாறே ஊ. சே. நி. திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களம் எவ்வாறான முயற்சிகளை எடுத்தாலும் அங்கத்தவர்களால் வங்கிக் கணக்கு பற்றிய சரியான தகவல்களை தொழல் திணைக்களத்தின் ஊடாக எமக்கு அறிவிக்கும் வரை மேற்குறிப்பிட்ட கணக்கின் மீதிகளை தீர்ப்பதனை நடைமுறையாக மேற்கொள்ள முடியாதென மேலும் அறிவிக்கிறோம். | தீர்க்காத பங்களிப்புத் தொகையை தாமதமின்றி தீர்க்கும் செயற்திறனான முறையொன்றை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | மரணித்த அங்கத்தவர்களுக்கு உரித்தான ஊழியர் சேம நலன்களை பெற்றுக் கொள்ள முன்வைக்கப்பட்ட விண்ணப்ப பரிசோதனையின் போது மீளாய்வாண்டு ஜுன் 20 திகதியன்று பிரதான அலுவலகத்தில் காணப்பட்ட செலுத்தாத மரண நலன் விண்ணப்ப எண்ணிக்கை 1,101 ஆனதுடன் அவற்றில் 220 விண்ணப்பங்கள் ஒப்படைத்த திகதி முதல் ஆண்டு 10 இற்கும் 15 இற்கும் இடையிலான காலமாகவும் 27 விண்ணப்பங்கள் ஆண்டு 4 இற்கும் 13 இற்கும் இடையிலான காலமாகவும் 8 விண்ணப்பங்கள் ஆண்டு 6 இற்கும் 10 இற்கும் இடையிலான காலமாகவும் காணப்படுவதுடன் 210 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இந்த செலுத்தப்படாதமரண நலன் பெறுமதி எவ்வளவு என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்காததுடன் அதன் முன்னேற்றம் தொடர்பாக திருப்தியடைய முடியவில்லை. | மரணித்த அங்கத்தவர்களுக்கு உரித்தான நலன் விண்ணப்பங்கள் சமர்பிக்கப்பட்ட போதும், அங்கத்தவரை அல்லது சேம தாரரை சரியாக உறுதி செய்து கொள்ள போதிய தகவல்களை கோவைக்கு சமர்பிக்காத சந்தர்ப்பங்களில் மற்றும் அங்கத்தவர் அல்லது சேம தாரர்கள் சரியாக உறுதியாகாத சந்தர்ப்பங்களில், தொழில் ஆணையாளர் (ஊழியர் சேம நிதியம்) இனது அங்கீகாரத்தின் மீது குறித்த சேம தாரரை அறிவூட்டிய பின்னர் விண்ணப்பங்கள் நிராகரிப்பு செய்யப்படுகின்றன.<br><br>அவ்வாறு நிராகரிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக குறித்த சேம தாரர்களால் சரியான மற்றும் போதிய தகவல்களை பின்னர் சமர்பிக்கும் சந்தர்ப்பங்களில், நிராகரிக்கப்பட்ட கோவைகளை கணனித் தொகுதியிலிருந்து அகற்றி, சேம தாரர்களுக்கு நலன்களை செலுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் மேலும் தயவுடன் அறிவிக்கிறேன். | மரணித்த அங்கத்தவர்களுக்கு கிடைக்க வேண்டிய நலன் தொகையை விரைவில் விடுவிக்க வெற்றிகரமான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஊழியர் சேம நிதியப் பிரிவின் செலவின தலைப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணனி கதிரைகள் மற்றும் எழுதுவிளைஞர் கதிரைகள் 55 இல் 53 உம், ஒரு Heavy Duty பிரதி எடுக்கும் இயந்திரமும், மடிக் கணனிகள் 30 இல் 22 உம்,பிரதி எடுக்கும் இயந்திரங்கள் 20 இல் 10 உம் மற்றும் அச்சு இயந்திரம் 90 இல் 06 உமாக மொத்த பண்டக இருப்புக்களும் தொழில் திணைக்கள தேவைப்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. | மொத்த தொழில் திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளிற்கும் வளங்கள் பிரிந்து செல்வதனை முறையாக்குவது நிர்வாகத்தின் பொறுப்பாகையால் மொத்த தொழில் திணைக்களத்தின் செயற்திறனை அதிகரிக்கும் நோக்கில் அந்த வளங்களை பயன்படுத்தியுள்ளதாக தயவுடன் சுட்டிக்காட்டுகின்றேன். | ஊழியர் சேம நிதிய நிதியங்களால் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகள் அந் நிதியத்தின் பணிகளிற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | வங்கிக் கணக்குள் 07 இல் காணப்பட்ட இணக்கஞ் செய்யப்படாத மீதிகளை தீர்ப்பதற்காக 2020 சனவரி 09 ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை ஒன்றிற்கு கைச்சாத்திட்டிருந்ததுடன் உடன்படிக்கை நிபந்தனைகள் பிரகாரம் உடன்பட்ட திகதி முதல் 08 வாரங்களினுள் இறுதி அறிக்கை சமர்பிக்கப்பட வேடியதாக இருந்த போதும், குறித்த கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை இந்த அறிக்கை திகதி வரையும் அடைந்து கொள்ள இயலுமாக இருக்கவில்லை. | 2001 முதல் 2018 ஆண்டு வரையான வங்கி இணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட மீதிகளை தீர்க்க விஷேட கருத்திட்டமொன்றை தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றின் பங்குபற்றலுடன் 2020 சனவரி மாதத்தில் ஆரம்பித்து கருத்திட்டத்தின் இடைக்கால அறிக்கை ஒன்றை 2020 ஒக்டோபர் 30 ஆம் திகதியன்று சமர்பிக்கப்பட்டுள்ளது. 2022 மற்றும் 2023 ஆண்டுகளிலும் குறித்த தரவுகளை சுயமாக பெற்றுக் கொள்ள இலங்கை வங்கி பொது முகாமையாளரின் தலைமையில் இலங்கை வங்கி அலுவலர்களுடன் பல கலந்துரையாடல்களின் பின்னர் பொது இனங்காணும் சுட்டியுடன் கூடிய தரவுக் கோவை ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நீண்ட காலமாக நிலவி வரும் இந்த வங்கிக் கணக்குகள் தீர்க்கப்படாத பிரச்சினையை மேலும் தாமதமின்றி முடிவுறுத்த முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |
| (உ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டம் ஏற்புடைய ஊழியர் ஒருவரின் தொழில் வழங்குனரால் ஊழியரின் ஒவ்வொறு மாத பங்களிப்புத் தொகையையும் ஊழியரின் உழைப்பிலிருந்து கழித்து அடுத்து வரும் மாதங்களின் இறுதி திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும். எனினும் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்த நிறுவனங்களின் பங்களிப்புத் தொகை | பதில் சமர்பிக்கப்படவில்லை | சட்ட பரிந்துரைகள் பிரகாரம் பங்களிப்பு தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்துவது தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போதுமுறையே 102 மற்றும் 95 நிறுவனங்கள் பதிவுத் திகதியிலிருந்தே பங்களிப்புத் தொகையை செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியளவில்ரூபா 10,503 மில்லியன் தொகையை அறவிட நிதியத்தினால் வெளி நிறுவனங்களிற்கு எதிராக தாக்கல் செய்துள்ள மொத்த வழங்குகளின் எண்ணிக்கை 13,760 உம், வெளி நிறுவனங்களினால் நிதியத்திற்கு எதிராக மொத்த பெறுமதி ரூபா 201.35 மில்லியன் கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மொத்த வழங்குகளின் எண்ணிக்கை 62 ஆனது. இந்த 62 வழக்குகளில் 32 வழக்குகளுமே 2015 மற்றும் 2019 ஆண்டுகளில் ஒரு தனியார் நிறுவனத்தினால் நிதியத்திற்கு எதிராக தாக்கல் செய்த வழக்குகளானது. ஆண்டு இறுதியில் செயற்படாத மற்றும் திறந்த பிடியாணை நிலையிலான வழக்குகள் முறையே 3,309 மற்றும் 2015 காணப்பட்டதுடன் அறவிட வேண்டியதான தொகை ரூபா 1,823.36 மில்லியன் மற்றும்ரூபா 533.82 மில்லியனாகும். | நிதியத்தினால் வெளி நிறுவனங்களிற்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழங்குகளின் தகவல்களை உரிய மாவட்ட மற்றும் துணை அலுவலகங்களின் மூலம் அழைப்பித்து வழங்கப்பட்டுள்ளதுடன் வெளி நிறுவனங்களினால் நிதியத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் தாகக்கல் செய்துள்ள வழக்குகளிற்குரிய தகவல்களை சட்ட செயற்பாட்டு பிரிவினூடாக வழங்கப்பட்டுள்ளது. அதனால் அங்கு திருத்தம் இல்லையென தயவுடன் அறிவிக்கிறேன். | சட்ட நடவடிக்கைகளை விரைவில் முடிவுறுத்திக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்து நிலுவை தொகைளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் சேம நிதியத்திற்கு சுயாதீனமான உள்ளக கணக்காய்வு பிரவொன்றை இஸ்தாபித்து இருக்காததுடன் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதிய பிரிவின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தொழில் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவின் அங்கீகார ஆளணி 14 ஆன போதும், உள்ளவாறான எண்ணிக்கை 8 பேர்களுடன் மட்டப்படுத்தப்பட்டிருந்தது. நிதியத்தினால் ரூபா 3.4 டிரிலியன் அளவான அங்கத்துவ நிதியமொன்றை முகாமைத்துவம் செய்யும் நிலையிலுள்ள திணைக்கள உள்ளக கணக்காய்வை வலுவூட்ட வேண்டுமென 2013 ஆண்டு முதல் | சுதந்திரமான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்றை அமைப்பது சிறந்ததாவதுடன், இந் நிதிய நிர்வாக நடவடிக்கைகள் மாத்திரம் இத் திணைக்களத்தின் கீழ் மேற்கொள்வதுடன் நிதி நிர்வாகம் இலங்கை மத்திய வங்கியின் நிதி சபையின் கீழ் செய்படுகின்றது. அதன் காரணமாக சுயாதீன கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்றை அமைக்க திணைக்கள பிரதானியாக எனக்கு உள்ள அதிகார பிரகாரம் மேற்கொள்ள முடியாது. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை இஸ்தாபிக்க தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும். |

தொடர்ந்தும் அரச கணக்குகள் மீதான செயற்குழுவின் மூலம் கட்டளை இடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் ஆளணியின் வெற்றிடங்களை நிரப்ப அல்லது நிதியத்தின் கணக்காய்வு நடவடிக்கைகளிற்காக கூடிய கவனம் செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நிதியத்தின் 2022 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட அங்கீகார உள்ள கணக்காய்வு திட்டம் மற்றும் ஆண்டிற்குரியதாக வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கையையும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பித்திருக்கவில்லை